வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 6183/ஆ4/ 2025, நாள் 16.03.2026

– – –

பொருள் : பள்ளிக்கல்வி– தேர்வுகள்– மத்திய கல்வி உதவித்தொகைத் திட்டம் –தேசிய வருவாய் வழி மற்றும் திறனாய்வுத் தேர்வு (NMMSS) – 2025–2026 –தேர்வு நாள் 10.01.2026 – தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது – சார்பாக

பார்வை : 1.சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ... 013364 / டி (3.) / 2025 நாள். 12.12.2025
2.அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்திக்குறிப்பு நாள் 15.03.2026

=========

பார்வை 1–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்திக்குறிப்பின் படி 2025 –2026 ஆம் கல்வி ஆண்டிற்கான மத்திய கல்வி உதவித் தொகைத் திட்டமான தேசிய வருவாய் வழி மற்றும் திறனறிவுத் தேர்வு (NMMSS EXAM) கடந்த 10.01.2026 அன்று எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு நடைப்பெற்றது.

பார்வை 2–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்திக்குறிப்பின் படி வேலூர் மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட தேர்வில் பங்கு பெற்று, கல்வி உதவித் தொகை பெற தகுதியான 34 மாணவர்களின் தேர்வுப் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இத்தேர்வில் தகுதி பெற்றுள்ள தேர்வர்கள் 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வியை தொடரும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை பெற்று வழங்குவதற்கான அனைத்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேற்குறிப்பிட்டுள்ள பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: கல்வி உதவித் தொகை பெற தகுதியான 34 மாணவர்களின் தேர்வுப் பட்டியல்.

**//ஒம்.//**
**முதன்மைக் கல்வி அலுவலர் ,**
**வேலூர் .**

பெறுநர் ,

சார்ந்த அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் / மாநகராட்சி/நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலை /தொடக்கக் கல்வி ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.